OS No.38/2017, நாள்: 14.10.2019

போச்சம்பள்ளி மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. சாட்சி திறந்த நீதிமன்றத்தில் அழைக்கப்பட்டு ஆஜர். நீதிமன்றத்தில் உதவியாளர் திருமதி.சரஸ்வதி அவரால் சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது. உரிமையியல் விசாரணை சட்டம் பிரிவின் கீழ் விசாரணை செய்யப்பட்டார்.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : பொற்செல்வி | வயது | : 38 |
| கணவர் பெயர் | : மணி, த/பெ.தங்கவேல் | வேலை | : விவசாயம் |
| கிராமம் | : விளங்காமுடி | நாட்டினம் | : இந்து |
| தாலுக்கா | : போச்சம்பள்ளி | சாதி | : -- |

பி.வா.சா.1 ___ பொற்செல்வி ஆஜர், முதன்மை விசாரணை :-

நான் இவ்வழக்கில் பிரதிவாதி. நான் என்னுடைய பிரமாண வாக்கு மூலத்தை தாக்கல் செய்கிறேன். அதை என்னுடைய முதல் விசாரணையாக ஏற்கவேண்டுகிறேன். 16.08.2019ம் தேதியில் நான் செலுத்திய வீட்டு வரி ரசீது **பி.வா.சா.ஆ.1** ஆகும். 28.11.2018ம் தேதி நான் பட்டா மாற்றம் செய்ய அளித்த மனு **பி.வா.சா.ஆ.2** ஆகும். 01.03.2018ம் தேதியில் நான் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் மனு அனுப்பியதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை **பி.வா.சா.ஆ.3** ஆகும். தாவா தள்ளுபடி ஆக வேண்டும்.

ஒம்./-ஏ. செல்வகுமார்,பி.இ.,பி.எல்.,
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நடுவர், போச்சம்பள்ளி